

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் வீ.எஸ்.விஜய், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர் வி.எம்.டி.ஏ.பாலாஜி மற்றும் கலந்து கொண்டனர்.



சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14 சமத்துவ நாளாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழக அலுவலகத்தில் அண்ணலின் திருவுருவப்படத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட மாநகர ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக

# அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆலோசனைக் கூட்டம்!

**ஏப். 16 அன்று – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!**

சென்னை, ஏப்.14

தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு வருமாறு:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.04. 2025 அன்று மாலை சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தமிழ்நாட்டில் உயர்கல்வியை



மேம்படுத்துவதற்காக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுப்பாளையம் பேரூராட்சியில்

# பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் உயர்மட்ட பாலம்!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

திருவண்ணாமலை, ஏப். 15 –

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 11.04.2025 அன்று புதுப்பாளையம் பேரூராட்சியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளி, காஞ்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், கீழ்தாமரை ப்பாக்கம் மற்றும் தென்மகாதேவமங்கலம் கிராமங்களை இணைக்கும் வகையில் செய்யாற்றின் குறுக்கே கட்டுப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணை த்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பள்ளிக்கல்வித் துறை சார்பாக நபார்டு வங்கி RIDF XXVII - 2023 - 24 திட்டத்தின் கீழ் ரூபாய் 149.52 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பாளையம் பேரூராட்சியில் உள்ள அரசு பெண்கள் மாதிரிப் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஏழு வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். மேலும் இக்கட்டிடத்தின் தரைதளமானது 2484 சதுர அடி பரப்பில் மூன்று வகுப்பறைகளும், முதல் தளமானது 2484 சதுர அடி பரப்பில் மூன்று வகுப்பறைகளும், இரண்டாம் தளமானது 1108 சதுர அடி பரப்பில் ஒரு வகுப்பறை கட்டிடமும், படி கூண்டு 315 சதுர அடி பரப்பு என மொத்தம் 6391 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பள்ளிக்கல்வித் துறை சார்பாக நபார்டு வங்கி RIDF XXVII - 2023 24 திட்டத்தின் கீழ் ரூபாய் 213.60 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், காஞ்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பத்து கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். மேலும் இக்கட்டிடத்தின் தரைதளமானது 3203 சதுர அடி பரப்பில் நான்கு வகுப்பறைகளும், முதல் தளமானது 3203 சதுர அடி பரப்பில் நான்கு வகுப்பறைகளும், இரண்டாம் தளமானது 1832 சதுர அடி பரப்பில் இரண்டு வகுப்பறை வகுப்பறை கட்டிடங்கள், படி கூண்டு 315 சதுர அடி பரப்பு என மொத்தம் 8553 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டுள்ளது.

மேலும் நெடுஞ்சாலைத் துறை சார்பாக நபார்டு கடனுதவி திட்டம் RIDF XXVII - 2022 23 திட்டத்தின் கீழ் ரூபாய் 15.05 கோடி மதிப்பீட்டில் கீழ்தாம ரைப்பாக்கம் மற்றும் தென்மகாதேவ மங்கலம் கிராமங்களை இணைக்கும் வகையில் செய்யாற்றின் குறுக்கே கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, போக்குவரத்து துறை சார்பாக 17 புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்து சிறப்புரை யாற்றியதாவது :

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் இருந்த 1281 தரைப்பாலங்களை எல்லாம் உயர்மட்ட பாலங்களாக மாற்ற வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில், கடந்த நான்கு ஆண்டுகளில் 1191 தரைபாலங்களை உயர்மட்ட பாலங்களாக மாற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கீழ்தாம ரைப்பாக்கம் மற்றும் தென்மகாதேவ மங்கலம் ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் செய்யாற்றின் குறுக்கே ரூ.15.05 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்ட பாலம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பாலம் கட்டப்பட்டதால் தென்மகாதேவமங்கலம், கடலாடி, கீழ்தாமரைப்பாக்கம், தாமரைபாக்கம், கிழக்குமேடு, மேப்பத்துரை, கீழ்பொத்தரை, கோடிகுப்பம், பெரியகிளாம்பாடி, சிறுகிளாம்பாடி, நயம்பாடி, பழங்கோயில், காஞ்சி, கீழ்பாலூர், மேல்சிறுவள்ளூர், காரப்பட்டு உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட கிராமங்களை சார்ந்த சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறுவது மட்டுமல்லாது, விவசாயிகள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்களும் பயன்பெறுவார்கள்.

மேலும் கலசப்பாக்கம் தொகுதியில் 202122 நிதியாண்டில் ரூ. 36.91 கோடி மதிப்பீட்டில் 33.50 நீளமுள்ள சாலைப்பணிகளும், 202223 நிதியாண்டில் ரூ.20 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் 19.40 கி.மீட்டர் சாலை மற்றும் பாலப்பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளது. கலசப்பாக்கம் தொகுதியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக நான்கு ஆண்டுகால ஆட்சியில் ரூ.91 கோடியே 81 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுப்பணித்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் ரூ. 3 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா மாளிகை கட்டப்பட்டுள்ளது. படைவீட்டில் ரூ. 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையமும், ரூ. 17 இலட்சம் மதிப்பீட்டில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் கழிவறை வசதிகளுடன் கட்டிடமும், ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் 21 அரசினர் உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளில் ஆழ்துளை கிணறு வசதிகளுடன் குடிநீர் வசதிகளும், ரூ.5 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 5 அரசினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும் என பொதுப்பணித்துறை மூலம் பள்ளிகளுக்கு அதிகளவில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டிப்பட்டுள்ளது. மேலும் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதியில் அதிகளவில் பாலங்கள் கட்டப்பட்டுள்ளதால், மக்கள் பயன்பெறுவது மட்டுமல்லாது கிராமங்களும் வளர்ச்சி அடையும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு திருவண்ணாமலை மாவட்ட வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம் பிரதீபன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், தலைமைப்பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், நெடுஞ்சாலைத்துறை செந்தில், திருவண்ணாமலை கோட்ட செயற்பொறியாளர், க(ம)ப பொதுப்பணித்துறை கௌதமன், நபார்டு மற்றும் கிராமச்சா லைகள் வேலூர் கோட்டப்பொறியாளர் திருமதி.ச.பா. கோரிமா, செங்கம், கலசபாக்கம் வட்டாட்சியர், புதுப்பாளையம், கலசபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.44.50 கோடி மதிப்பில் – சைதை

# எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் புதிய கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஏப். 15 -

சென்னை, சைதாப்பேட்டையில் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிக் கட்டடத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.4.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து உயர்கல்வி பயில சென்னைக்கு வருகை தரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக, சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி கட்டப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்களால் 15.12.1961 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதுவரையில் சுமார் 25,000 மாணவர்கள் அந்த விடுதியில் தங்கி உயர்கல்வி பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசின் 2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சென்னை, எம்.சி. இராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் தற்போது காலியாக வுள்ள இடத்தில் சமார் 1,01,101 சதுர அடி பரப்பளவில்

10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னையில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பொறியியல், தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் துறைகளில் பயின்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதால் அவர்களது தங்குமிடத் தேவையை பூர்த்தி செய்யவும், அவர்களது திறனை மேம்படுத்தவும் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மாணவர் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.7.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.3.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக எம்.சி. இராஜா விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் 44.50 கோடி ரூபாய் செலவில் விடுதி கட்டி முடிக்கப்பட்டு, நல்லிணக்கத்தை போற்றும் வண்ணம், சமத்துவ நாளான அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி மாணவர்களின் நலனுக்காக இந்த விடுதி திறக்கப்படும் என்றும், இக்கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன்படி, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான நேற்று சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர், அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இப்புதிய விடுதிக் கட்டடம், மொத்தம் 1,01,101 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 10 தளங்களுடன், 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கூடிய 121 தங்கும் அறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரை தளத்தில் சமையலறை, உணவருந்தும் கூடம், கண்காணிப்பாளர் அறை, பராமரிப்பாளர் அறை, ஓய்வறை, 4 மாணவர் தங்கும் வகையிலான அறைகள், முதல் தளத்தில் நூலக அறை, பன்னோக்கு கூடம், 9 மாணவர் தங்கும் வகையிலான அறைகள், இரண்டாம் தளம் முதல் பத்தாவது தளம் வரை ஒவ்வொரு தளத்திலும் நூலக அறை, 12 மாணவர் தங்கும் வகையிலான அறைகள் மற்றும் இக்கட்டடத்தின் மேல்தளத்தில் 35,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு நீர் தேக்க தொட்டிகள், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு வசதி, 1,20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, சுற்றுச்சுவர், உட்புற சாலை வசதிகள், தீயணைப்பு வசதிகள், மின்தூக்கிகள், பார்வையாளர் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், ஆ.ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, த.வேலு, கிருஷ்ணசாமி, இ. பரந்தாமன், தாயகம் கவி, சிந்தனைச்செல்வன், அரவிந்த் ரமேஷ், பிரபாகர ராஜா, திருமதி தமிழரசி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட அலுவலகத்தில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135–ஆவது பிறந்தநாள் முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி மாவட்ட துணை செயலாளர்கள் குமுதா குமார் துரை மஸ்தான் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சி.சக்திவேல் பேரூர் செயலாளர் பெரியசாமி, நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எம்.ஜெயக்குமார் நகர துணை செயலாளர் குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135–வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்தார். உடன் கழக மருத்தவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், கு.கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.